www.padippakam.com

# எரியும் உன் சிதை வெளிச்சம் தரட்டும்!

நண்பா!

நம் வாயிலிருந்து வருகின்ற
ஒவ்வொரு உண்மைக்கும்
ஒவ்வொரு துப்பாக்கிக் குண்டு
பரிசாகக் கிடைக்கும்
காலம் ஒன்று வருமோ?

அன்புடன் நண்பனுக்கு;

எப்படி எழுதுவது? எங்ஙனம் தொடர்வது. எழுதும் நிலையிலா நாங்கள் உள்ளோம். மண்ணையும் மக்களையும் நேசித்தவர்களால் மரணித்துப் போனவர்கள் வரிசையில் இன்று நீயும். நீ கால் பதித்த பாரிஸ் தெருக்களில் நாம். வெறுமை. எங்கும் எதிலும். உன் நினைவுகளும் கனவுகளுமே எங்களிடம் மிஞ்சியுள்ளது. உன் மரணத்தை ஜீரணிக்க தோல்வியுற்ற மனிதர்களாய் நாங்கள். நண்பா நேற்றைய அந்தக் காலங்கள் எங்கள் நினைவுகளில் பசுமையாய்.....

கட்டுப்பெத்த தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் முதன்முதலாய் நீ. அதுவரை காலமும் தமிழ் மாணவர்களின் இலக்கியத்தேடலுக்கு எவ்வித வழியுமற்று மூடப்பட்டிருந்த கதவுகளை நீளத் திறந்தாய். உருவாயிற்று. "காவலன்" எனும் தமிழ்- இலக்கிய சஞ்சிகை. அதன் உருவாக்கத்தில் நீ எடுத்துக் கொண்ட முயற்சிகளும் காட்டிய ஆர்வமும். நண்பா உன் இலக்கியத் தேடலின் முன் நாங்கள் சிறு துரும்பு. எனினும் உன் இலக்கியக் கனவுகள் வடிவங்களாய் உருப்பெறும். துயரம் கொள்ளாதே.

1970 ம் ஆண்டுக் காலமது. ஞாபகம் கொள்வாய் நண்பா. நீயும் உனது தோழர்களும் தமிழ் மாணவர் பேரவையை உருவாக்கி மாணவர் நலம் பேணவும். எம் உரிமை பெற்றிடவும் அரசின் இனவாத கொடூரங்களுக்கெதிராய் கிளர்ந்தெழுந்த அன்றைய கால உன் நினைவுகள் எங்களிடம். உன் சுறுசுறுப்பும் வழிகாட்டலும் தமிழ் இளைஞர் பேரவையின் உருவாக்கத்திற்கு துணை நின்ற காலமது. இவ் வரலாற்றினை, வரலாறுகளையும் வரலாற்றாசிரியர்களையும் புதைகுழி தோண்டிப் புதைக்கும் கொலைவெறி பிடித்த கயவர் கூட்டம் எங்ஙனம் அறியமுடியும். நண்பா; மரணம் என்பது வாழ்வின் முடிவல்ல. மரணத்திற்கு அப்பாலும் உன்னைப் போன்றவர்களுக்கு வாழ்வு உண்டு. அவ் வாழ்வின் ஆரம்பம் இன்று. கவலை கொள்ளாதே. உன் வாழ்வின் லட்சியங்கள் நிச்சயம் உயிர்பெறும். துப்பாக்கி மிருகங்களின் வெறித்தனம் உன் உயிரைக் கொன்றது. ஆனால் உன் நெஞ்சத்துக் கனவுகள் கனமானவை. உறுதி கொண்டவை. கவலை கொள்ளாதே. அமைதி கொள்.

1973 ம் ஆண்டும் எங்கள் நினைவுகளில்.... உன் வாழ்வில் ஓர் துயரமான காலமது. அரசின் பாரிய வேட்டைக்குப்பின் நீ சிறைவைக்கப்பட்டாய். மூன்றாண்டு கால சித்திரவதை. எனினும் உன் தப்பி ஓடும் முயற்சி. அன்றைய காலங்களில் எங்களுக்கு மலைப்பான செய்தி இது. நாரிமுறிவோடு ஐந்தாண்டு தலைமறைவு வாழ்வும் போராட்ட செயற்பாடும். அதுவோர் போராட்ட நெறிகொண்ட காலமது. அரசின் கொடூரமான தேடலுக்கு உயிர்தப்பி உன் ஐரோப்பா புகலிடப் பயணம், நேற்றைய நிகழ்வுகளாய் இன்று எங்களிடம்.....

உன் புகலிட தரிப்பிடம் பாரிஸ் ஆயிற்று. எங்கள் பயணம் இங்காயிற்று. தரிப்பிடத்தில் நீ. மீண்டும் மலைக்கின்றோம். எத்தனை செயற்பாடுகள். தலைவணங்குகின்றோம் நண்பா. புகலிட வாழ்விலும் உன் போராட்ட நேசிப்பும் தாயக உணர்வையும் அறிவோம் நண்பா. ஈழத்தில் 'துப்பாக்கி கலாச்சாரத்தையே' தமிழரின் கலாச்சாரப் பாணியாக்கிட முயலும் வெறித்தன முட்டாள் கூட்டத்தின் செயற்பாடுகளுக்கு அப்பால் தமிழரின் உன்னதமான கலாச்சார செல்வங்கள் அழிந்திடாமல் காக்கவும், அதை வளர்க்கவும் நீ எடுத்துக் கொண்ட முயற்சிகள், செயல்கள் அறிவுச் சூனியங்களினால் எப்படி ஜீரணித்துக் கொள்ள முடியும்? நண்பா அறிவு என்பது வெறியர்களின் அகராதியில் அகற்றப்பட்ட சொல்லாயிற்றே. நண்பா "ஆசியா" ஆய்வு நிறுவனம் மூலம் நீ வெளிக்கொணர்ந்த சமூக பொருளாதார ஆய்வு நூல்கள், கலை இலக்கியப் படைப்புகள், எதிர்கால செயற்திட்டங்கள் அனைத்தும் இவ் அறிவுச் சூனியங்களுக்கு கசப்பான விடயங்களே. நண்பா; இறுதிக் காலத்தில் தமிழர் வாழ்வியல் தொடர்பாகவும், கடந்த கால போராட்ட நெறிமுறை தொடர்பாகவும் வரலாறுகளை ஆவணப்படுத்தும் பெருமுயற்சியில் செயல்கொண்டாய். இவ் நேரத்தில் உன் கொலை, கொலைவெறியர்களின் நோக்கத்தின் மேல் எங்களுக்கு பலத்த சந்தேகத்தினை கொடுக்கின்றது நண்பா. கடந்த காலப்போராட்டத்தில் இவர்களால் இழைக்கப்பட்ட கொலைகளும், துரோகத்தனங்களும், மறைக்கப்பட்ட உண்மைகளும் வெளிச்சத்திற்கு வெளிக்கொணரப்

படிப்பகம்

பட்டு விடுமோ என்று துப்பாக்கி மிருகங்கள் அஞ்சின போலும். நண்பா; இவர்களின் வெறித்தன கொலைகளினால் உண்மைகள் என்றும் உறங்கிடப் போவதில்லை. நண்பா; கொலைகளின் மூலம் துரோகங்களை மூடி மறைப்பதுதானே இவர்களின் இயக்கச்சித்தாந்தம். கொலைகாரர்களின் எதிர்பார்ப்பு வெறுமை கொள்ளட்டும்.

யாழ்ப்பாண நூல் நிலையம் எரிக்கப்பட்டு ஈழத்தமிழரின் வரலாற்று ஆவணங்கள் அழிக்கப்பட்ட நிகழ்வை எண்ணி அதனை குறைந்தபட்சமாவது ஈடுசெய்ய வேண்டும் என்ற துடிப்போடு நீ சேகரித்து வைத்த நூல்களும், பெறுமதி மிக்க ஆவணகாப்பகமும் உன் நினைவுகளை என்றும் இயம்பும்.

மக்களின் உண்மையான விடுதலையை நேசிப்பவர்களையும், புத்திஜீவிகளையும், கொன்றொழிப்பதையே தமது வெறித்தன கொலைகள் மூலம் ஈழத்தில் பறைசாற்றிய முட்டாள்கூட்டம் இப்பொழுது தமிழர் களின் புகலிடவாழ்விலும் தமது கைவரிசையைக் காட்டிட முனைந்து நிற்பதை நாம் எவ்வகையில் ஏற்றுக் கொள்வது நண்பா?

*நேற்று உன் கதவு தட்டப்பட்டது.*
*நாளை எங்கள் கதவும் தட்டப்படும்.*
*இதை நாம் உணராத பட்சத்தில் புகலிடவாழ்வும் "துணுக்காய் கொலைக்களமாய்-வதைமுகாமாய்" ஆகும் நிலை வெகுதூரத்தில் இல்லை என்பதை உணர்கின்றோம் நண்பா.*

**புகலிட வாழ்விலும் துப்பாக்கி மிருகங்களினால்**
**சுதந்திரம் இழந்து தவிக்கும் உன் நண்பர்கள்.**

(நண்பர் சபாலிங்கம் துப்பாக்கி மிருகங்களினால் படுகொலை செய்யப்பட்டமைக்காக வெளியிடப்படும் பிரசுரம் இது.)